கயத்தாறுக்கு அருகிலுள்ள விமான தளம்

* 61 வினு.—திரு. எம் முத்தையா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கயத்தாறுக்கு அருகிலுள்ள விமான தளத்தை விமானப் பயிற்சி நிலையமாக்குவது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து மாநில அரசுக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, இந்தக் கயத்தாறு விமான தளத்தை அபிவிருத்திசெய்தால், தூத்துக்குடி துறைமுகத்திற்கும், கோவில் பட்டி, திருநெல்வேலி மாவட்டத்திற்கும் போக்குவரத்து வசதி ஏற்படும். ஏற்கனவே தூத்துக்குடி துறைமுகத்திற்கு ஒரு விமான வசதி ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய சர்க்கார் ஆலோசித்துக் கொண்டு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்த கயத்தாறு தளத்தை விருத்திசெய்வதில் நம் அரசாங்கத்திற்கு செலவு இல்லாமல் செய்யலாம் என்று கருதுகிறேன். ஆகையால், மாநில அரசு மத்திய அரசோடு இதுபற்றிப் பேசி, சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தூத்துக்குடி துறைமுகத்திற்கு அருகே ஒரு விமானநிலையம் அமைக்க செயற்குறிப்பு இருக்கிறது. இந்தக் கயத்தாறு தளத்தை உபயோகிக்கும் செயற்குறிப்பு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தூத்துக்குடிக்கு அருகாமையில் இருக்கும் இடத்தில் ஏர்-ஸ்ட்ரிப் அமைக்க செயற்குறிப்பு இருக்கிறது என்கிறார்கள். அது எவ்வளவு சீக்கிரத்தில் அமைக்கப்படும்? அதுபற்றி, மத்திய சர்க்காரை வலியுறுத்த நம் அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். இந்த விமான தளத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

Export of Bananas

* 62 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to have a special drive for the export of Bananas from this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) வாழைப்பழ உற்பத்தியைப் பெருக்கவும், இப்பயிர் சாகுபடியாகும் பரப்பை அதிகரிக்கவும், தீவிரசாகுபடித் திட்டமொன்று வட ஆற்காடு, செங்கற்பட்டு, மதுரை, கோயம்

புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல் பட்டு வருகின்றது. உள் நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய, பூவன், மொந்தன் முதலிய ரகங்களின் உற்பத்தியைப் பெருக்கவும், உலகநாட்டுச் சந்தைகளின் தேவைக்கேற்ற ஏற்றுமதிக்கான குட்டை வாழைகள் உற் பத்தியாகும் பரப்பை அதிகரிக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்தின் கீழ், நவீன சாகுபடி முறைகளைக்கையாள அறிவுறுத்தப்படுகிறது. நோயற்ற வாழைக்கன்றுகள் சாகுபடியாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் குறுகிய காலக்கடன்கள் சாகுபடியாளருக்கு அளிக்கப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், வாழை உற்பத்தியில் இத்தனை அக்கறை எடுத்துக் கொண்டு ஆதரவு கொடுக்கிறார்கள். உற்பத்தியான வாழைக்கு சந்தை தேடுவது பெரிய பாடாக இருக்கிறது. வாழையைச் சரியான விலைக்குக் கொடுக்கக் கூடிய சந்தையையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்போது அது சம்மந்தமான நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொன்ன நேரத்தில், பல்வேறு மாவட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், அதில் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இப்படிப் பட்ட உற் பத்தித் திட்டம் தஞ்சையில் இருக்கிறதா ? உற்பத்தியாகும் வாழைப் பழத்தை கொண்டு 'பனானா பவுடர்' செய்யக் கூடிய சிறு தொழிலை நிறுவி, அயல் நாட்டு உதவியோடு அப்படிப் பட்ட தொழில் அமைக்க திட்டம் ஏதா வது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தஞ்சை மாவட்டத்தில் தீவிர விவசாயத் திட்டம் அமுலில் இருக்கிறது. அதிலே வாழை சேரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புத் திட்டத்தை திருநெல்வேலிக்கு அருகாமையில் உள்ள ஜில்லாவில் அமுல் செய்தால், தூத்துக்குடி வழியாக வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்ய வசதி யாக இருக்கும் என்பதால், அப்படிப் பட்ட திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்சமயம் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஏற்றுமதிக்குப் பயன்படும் இந்தக் குட்டைவாழைக்கு ஒரு நோய் ஏற்படுகிறது. விவசாயத் துறையில் இதற்கு 'டையடின்' என்கிற பூச்சி மருந்தை அடிக்க வேண்டும் என்று கூறு கிறார்கள். அப்படி அடித்தாலும், வாழையின் நோய் நீங்குவதில்லை. ஆகவே, வாழைக்கு இருக்கும் இந்த நோயைப் போக்கும் வகையில், புதிய முயற்சிகளை அரசு மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றி தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதில் தீவிர கவனம் செலுத்தப் படுகிறது. அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

1971 அக்டோபர் 25]

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, விவசாய தீவிர சாகுபடி திட்டத்தின் மூலம் அதிக உற்பத்தியில் அக்கறை இருக்கும்போது, நவீன முறையில் சாகுபடிசெய்து உற்பத்தியை அதிகரிக்க முறைகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றனவா? அது சம்பந்தமாக வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு செயல் பட வாழை உற்பத்தி அதிகாரிகளுக்கு வழி செய்யப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய திட்டம் இருக்கிறது. நவீன முறையில் சாகுபடி செய்யவும் திட்டம் இருக் கிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் விஸ்தரிப்புத் திட்டம் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்கள். ஊராட்சி ஒன்றிய விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, விவசாயிகளிடத்தில் விவரங்களைச் சொல்லி ஊக்குவிக்கும் சூழ்நிலை இல்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தில் இதை அமுல் படுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் பூராவும் இந்தத் திட்டம் செயல்படவில்லை. ஒவ்வொரு பகுதிகளில் எடுக்கப் பட்டிருக்கிறது. 1968-69-ல் 6,300 ஏக்கராவும், 1969-70-ல் 3,771 ஏக்கராவிலும், 1970-71-ல் 4,333 ஏக்கராவிலும் விவசாயம் செய்யப் படுகிறது. பயிர் சுழல் முறையில் செய்யப் படுவதால், அதில் கொஞ்சம் குறைவு ஏற் படுகிறது.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, இந்த வாழையானது, பங்குனி, சித்திரை, அக்கினி நட்சத்திர காலத்தில், வெப்பமான நிலையில், குலைகள் தள்ளும். அப்பொழுது இவை திமர் திமரென்று சாய்கின்றன. அதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையினால், அதற்கு ஒரு 'ஏர்-கண்டிஷன்' முறையை ஆராய்ச்சிசெய்து ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதற்கு ஏர்-கண்டிஷன் தேவை யில்லை. அதற்காகத்தான் முன்பே சொன்னார்கள், 'பருவத்தே பயிர் செய்' என்று.

* 63 வினா.—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் தீவிர வாழை சாகுபடித் திட்டம் கோவை மாவட்டத்தில் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1965-66 ஆம் ஆண்டிலிருந்து, ஏற்றுமதிக்கான வாழை உற் பத்தித் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இத்திட்டம், ஈரோடு, தாரா